மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021ம் வருடம் ஜனவரி மாதம் 5 ம் நாள்
சார்வரி ஆண்டு மார்கழி மாதம் 21 ம் நாள் செவ்வாய் கிழமை

**I.A . No.401/2018**

**in**

**O.S. No. 76/2016**

1) புஷ்பம்
2) தங்கம்மாள்

மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1) சீனி (எ) சிவகுருநாதன் செட்டியார் (இறப்பு)
2) நாராயணசாமி
3) தமிழ்செல்வி
4) ராஜேஸ்வரி
5) பழனியம்மாள்
6) நாகு
7) பூவராஜா
8) மைனர் புவனேஸ்வரி
9) தங்கமயில்
10) செவந்தியம்மாள் (எ) செல்வராணி
11) பூமாதேவி

...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 28.08.2018ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. முத்துவேல் அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற காப்பாளராக வழக்கறிஞர் திரு.S. நாச்சியார் அவர்கள் ஆஜராகியும், கடந்த 21.12.2020ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி இறந்தததால், அவரது சட்டப்பூர்வ வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஏற்பட்ட 106 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை ஏற்றுக்கொள்ள அனுமதி கோரி காலவரையறைச்சட்டம் பிரிவு 5ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி என்றும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் 1ம் பிரதிவாதி கடந்த 13.12.2017ம் தேதியில் இறந்து விட்டார் என்றும், 2 முதல் 4 பிரதிவாதிகள் அசல் வழக்கில் எதிர்வாதம் செய்ய முன் வராததால், அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். எனவே இறந்த 1ம் பிரதிவாதியின் வாரிசுகளின் வாரிசுகளான 5 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமானதாக உள்ளது என்றும், மேற்படி 1ம் பிரதிவாதி வாரிசுகள் வெவ்வேறு முகவரியில் வசித்து வந்ததால், 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கும், வாதி குடும்பத்தினருக்கும் இடையே சுமுகமான உறவு இல்லாததால் அவர்களின் முகவரியை அறிய இயலவில்லை என்றும், எனவே 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்க்காததால், அசல் வழக்கு விலக்கப்பட்டதை ரத்து செய்யக்கோரும் மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 106 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதாகவும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து மனுவினை அனுமதிக்கவேண்டியது அவசியமானது என வாதுரைக்கப்பட்டது.

**2) 8ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:**

மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் பொய்யானது என்றும், இந்த நிர் 8ம் பிரதிவாதியின் தந்தை வழி தாத்தாவான 1ம் பிரதிவாதி கடந்த 13.12.2017ம் தேதியில் இறந்து விட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவருக்கு பழனியம்மாள் என்ற மனைவியும் செல்வராஜ், செவந்தியம்மாள், பூமாதேவி ஆகியோர்கள் வாரிசுகளாக உள்ளார்கள் என்றும், அதில் செல்வராஜ் என்பவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்றும், அவருக்கு நாகு என்ற மனைவியும், பூவராஜா என்ற மகளும், இந்த நிர் எதிர்மனுதாரரும் வாரிசுகளாக உள்ளார்கள் என்றும், மேற்படி விபரங்களை நன்கு தெரிந்தும் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது

3) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**தீர்வு:-**

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அசல்

வழக்கின் 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்த நிர் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டும், மேற்படி அவர்கள் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். 5 முதல் 7 மற்றும் 9 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையாகியும் எதிர்உரை தாக்கல் செய்யாததால், கடந்த 08.06.2019ம் தேதியில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். மேலும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அசல் வழக்கானது விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் 8ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவரும் முன்னிலையாகாததால், அவர் இளவராக இருக்கின்ற நிலையில், நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்து அதன் பேரில் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், தாவா சொத்தில் பங்கு உரிமையுடைய அனைத்து தரப்பினர்களும் வழக்கு தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். 8ம் எதிர்மனுதாரர் தரப்பில்தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையில் இறந்த போன 1ம் பிரதிவாதியின் மகனான செல்வராஜ் ஆகியோர்கள் தொடர்பாக மறுக்கவில்லை. எனவே இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு தரப்பினர்களுக்கு வழக்கு சொத்தில் பங்கு உரிமையுடைமை உள்ள அனைத்து தரப்பினர்களை சேர்ப்பதற்கு இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, மேற்படி பொருண்மை மற்றும் சட்ட நிலைபாட்டின்படி இம்மனு அனுமதிக்கக் கூடியது என்றே தீர்வு காணப்படுகிறது.

இருந்தபோதிலும், காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நடவடிக்கையினால் எதிர்மனுதார்களுக்கு ஏற்பட்ட கால விரையம் மற்றும் பொருளாதார விரையத்தை ஈடுசெய்யும் பொருட்டு மனுதார்கள் எதிர்மனுதார்களுக்கு ரூ.750/- செலவுத்தொகை 11.01.2021ம் தேதிக்குள் செலுத்துவதின்பேரில் இம்மனு அனுமதிக்கக்கூடியது என தீர்வு காணப்படுகிறது. தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும்.

இறுதியாக இம்மனு செலவுத்தொகை ரூ.750/-ஐ மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு 11.01.2021ம் தேதிக்குள் செலுத்துவதின்பேரில் அனுமதிக்கக் கூடியது என தீர்வு காணப்படுகிறது.

செலவுத்தொகை செலுத்தப்பட்டதை பதிவு செய்வதற்கான அடுத்த வாய்தா நாள் :18.01.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால்

கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//